செய்தி வெளியீடு எண்: 809 நாள்: 18.06.2024

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய "இராமானுஜர் – மதத்தில் புரட்சி செய்த மகான்" எனும் தொலைக்காட்சித் தொடர் நூலாக்கம் செய்யப்பட்டு இந்து சமய அறநிலைத் துறை சார்பில் நூலாக வெளியிடப்பட்டது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு**

அடித்தட்டு மக்களுக்கு மாண்புப் பெயர்கள் சூட்டிச் சுயமரியாதையைக் காத்த இராமானுஜரின் காவியத்தை "மதத்தில் புரட்சி செய்த மகான்" எனத் தனது நிறைவுக்கால படைப்பாக வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர்!

சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களை அரவணைத்துக் கோயில் நுழைவு செய்து – கோயிலினுள் தமிழ் மந்திரங்களை ஓங்கி ஒலிக்கச் செய்த இராமானுஜரின் வாழ்வுதன்னை, முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துகளில் உங்கள் கைகளுக்குப் புத்தகமாக வழங்குகிறோம்.

சமயங்களும் சமய நெறிகளும் மானுடத்தை மேம்படுத்த, ஒற்றுமையை வளர்க்க, ஏற்றத்தாழ்வுகளை நீக்க வழிகாட்டட்டும்! பொலிக! பொலிக!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu